மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயம்

(சிறப்பு சார்பு நீதிமன்றம் எண். 1, சேலம்.)

முன்னிலை: திருமதி.கா.கன்யாதேவி, B.A., B.L.,

சிறப்பு சார்பு நீதிபதி எண். 1, சேலம்.

2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ம் தேதி வெள்ளிக்கிழமை

MCOP.No.1073/2024

CNR No.TNSA0B–001195–2024

செல்வராஜ், வயது 68,
த/பெ. நரசிம்மன்,
கதவு எண் 6/6,
மாரியம்மன் கோவில்,
காடையாம்பட்டி அஞ்சல்,
பவானி தாலுக்கா,
ஈரோடு மாவட்டம் – 638 312. .. மனுதாரர்

// எதிர்//

1. V.விஜய், வயது 34,
த/பெ. வெள்ளையன்,
கதவு எண். 50,
மாகாளியம்மன் கோவில் தெரு,
முத்துகவுண்டனூர்,
பவானி தாலுக்கா,
ஈரோடு மாவட்டம் – 638 314.

2. M. விக்னேஷ்,
த/பெ. முருகேசன்,
கதவு எண். 162,
நடேசன் நகர்,
வெள்ளக்கோவில்,
காங்கேயம்,
திருப்பூர் மாவட்டம் – 638 111.

3. அத்தோனி மரியா,
SF எண். 45-1 , 46-2B, 47,
புதுப்பாளையம் கிராமம்,
அவினாசி,
திருப்பூர்,
கோயம்புத்தூர் – 641 654.

4. ICICI Lombard ஜெனரல் இன்ஸ்சூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்,
நான்காவது பர்சவ்நாத் கேபிடல் டவர்ஸ்,
பல்வீரசிங் மார்க்,
நியூ டெல்லி – 110 001.
கிளை அலுவலகம்
6/5 Block No. 7 ,
Ward C.ஸ்வர்ணாம்பிகை பிளாச,
ஓமலூர் மெயின் ரோடு,
பேருந்து நிலையம் அருகில்,
சேலம் – 636 009. .. எதிர்மனுதாரர்கள்

இம்மனு 22-03-2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்கு பின்னிட்டு 04.08.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.முருகேசன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 ம் எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினராக்களாக்கப்பட்டும், 4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.அசோக்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகள் கேட்டும், வழக்கு ஆவணங்களை ஆய்வு செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:-

## உத்தரவு

16.01.2024 ம் தேதி நடந்த மோட்டார் வாகன விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ₹.25,00,000/- இழப்பீடு கோரி இம்மனுவினை மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166 ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

1. ***மனுவின் சுருக்கம்:-***

கடந்த 16.01.2024ம் தேதி சுமார் 12.45 மணியளவில் மனுதாரர் பவானி – ஆப்பக்கூடல் சாலையில், காடையாம்பட்டி சிங்கரவேலன் வீடு அருகில் நடந்து சென்று கொண்டிருந்த போது, 1ம் எதிர்மனுதாரர் TN 42 AY 6463 ( Maruthi Suzuki Car) என்ற பதிவு எண் கொண்ட காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், போக்குவரத்து விதிகளை கடைப்பிடிக்காமலும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் மனுதாரருக்கு RTA Left leg injury – Leg lower 1/3rd comminuted fracture tibia, RTA left Hand injury – Fracture shaft of left humerus, 1) Wasting of all left upper arm, left forearm and left hand muscles, 2)Medial and ulnar nerve motor functions could not be evaluated, 3) Left II and III finger already amputated at distal interphalangeal joint and proximal interphalangeal joint respiratory levels, 4) Fingers and hand movements but for slight pinching totally absent, 5) Upper arm in badly wasted, gross deformity + and grievous injuries all over his body காயங்கள் ஏற்பட்டது. உடனே மனுதாரர் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பவானி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு, பின்னிட்டு மனுதாரர் பெருந்துறை மெடிக்கல் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னிட்டு பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் 19.01.2024 முதல் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மனுதாரருக்கு மருத்துவமனையில் அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது. மனுதாரர் மருத்துவச் செலவுகளுக்காக ரூ.6,00,000/-க்கும் அதிகமாகச் செலவிட்டுள்ளார். விபத்து சமயத்தில் மனுதாரருக்கு 68 வயது. அவர் மூட்டை தூக்கும் வேலை செய்து மாதம் ரூ.30,000/-ம் சம்பாதித்து வந்தார். விபத்திற்கு TN 42 AY 6463 என்ற காரின் ஓட்டுனர் காரணமாவார். அவர் மீது பவானி காவல் நிலைய குற்ற எண்.45/2024 இ.த.ச. பிரிவுகள் 279, 337-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. TN 42 AY 6463 என்ற காரின் ஓட்டுனர் 1ம் எதிர்மனுதாரர் என்பதாலும், காரின் பதிவு பெற்ற உரிமையாளர் 2ம் எதிர்மனுதாரர் என்பதாலும், மேற்படி வாகனம் 3ம் எதிர்மனுதாரர் பெயரில் 4ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு விபத்து சமயத்தில் நடைமுறையில் இருந்ததாலும், எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ தனிதனியாகவோ இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

2. ***<u>2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:–</u>***

மனுதாரரின் மனு தவறானது, சட்டத்தின் படியும் சங்கதிகளின் படியும் நிலைநிற்கத்தக்கது அல்ல. மனு சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். விபத்து தேதி, நேரம், இடம், விதம் மனுதாரரின் வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். விபத்து நடந்து நான்கு நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அது குறித்து மனுதாரர் விளக்கம் அளிக்க கடமைப்பட்டுள்ளார். மனுவில் சொல்லியுள்ளவாறு விபத்து ஏற்படவில்லை. காரின் ஓட்டுனர் மெதுவாகவும், கவனமாகவும், சாலை விதிகளை கடைபிடித்து சென்ற போது அவருக்கு முன்னால் சென்ற மனுதாரர் நிலை தடுமாறி காரின் முன்பக்க கதவுக்கு முன்னால் விழுந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார். கார் ஓட்டுனர் விபத்திற்கு காரணம் இல்லை. மனுதாரர் தீங்கிழைத்தவர் என்பதால் இழப்பீடு கோர இயலாது. விபத்து பதிவேட்டில் இருசக்கர வாகனம் மோதியதாக சொல்லப்பட்டுள்ளது. அதனால் கார் விபத்தில் சம்மந்தப்படவில்லை. ஏற்கனவே மனுதாரருக்கு இரண்டு மற்றும் மூன்றாவது விரல்கள் துண்டிக்கப்பட்டுள்ளதால் விபத்தினால் அவை ஏற்படவில்லை. மனுதாரருக்கு எவ்வித ஊனமும் இல்லை. மனுதாரர் தற்போது முற்றிலும் குணமாகி அவரது அன்றாட பணிகளை செய்து வருகிறார். காருக்கு விபத்து சமயத்தில் காப்பீடு உள்ளது என்பதையும், கார் ஓட்டுனருக்கு செல்லதக்க ஓட்டுனர் உரிமம் உள்ளது என்பதையும் மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகபடியானது. எனவே 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கோரி உள்ளார்.

3. இவ்வழக்கில் 1 முதல் 3ம் எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். 4ம் எதிர்மனுதாரரான இன்சூரன்ஸ் கம்பெனி தரப்பில் பிரிவு 170 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பில், மனுதாரர் செல்வராஜ் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சாஆ.16 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நுண்கதிர் படத்துடன் கூடிய ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 4ம் எதிர்மனுதாரர் தரப்பில், 1ம் எதிர்மனுதாரர் விஜய் எ.ம.சா.1 ஆக

விசாரிக்கப்பட்டுள்ளார். பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையின் மேலாளர் தீபக் என்பவர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, சா.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பவானி அரசு மருத்துவமனையின் நுரையீரல் மருத்துவர் டாக்டர். செந்தில் நாதன் எ.ம.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. ***தீர்வுக்குரிய பிரச்சனைகள்***:

1. விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?

2. மனுதாரருக்கு இழப்பீட்டு தொகையை யார் கொடுக்க வேண்டும்?

3. மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

6. ***பிரச்சினை எண். 1 மற்றும் 2 க்கான தீர்வு:–***

மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், கடந்த 16.01.2024 ம் தேதி சுமார் 12.45 மணியளவில் மனுதாரர் பவானி – ஆப்பக்கூடல் சாலையில், காடையாம்பட்டி சிங்கரவேலன் வீடு அருகில் நடந்து சென்று கொண்டிருந்த போது, 1ம் எதிர்மனுதாரர் TN 42 AY 6463 ( Maruthi Suzuki Car) என்ற பதிவு எண் கொண்ட காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், போக்குவரத்து விதிகளை கடைப்பிடிக்காமலும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், விபத்து சமயத்தில், TN 42 AY 6463 என்ற காரின் ஓட்டுனர் 1ம் எதிர்மனுதாரர் என்பதாலும், காரின் பதிவு பெற்ற உரிமையாளர் 2ம் எதிர்மனுதாரர் என்பதாலும், மேற்படி வாகனம் 3ம் எதிர்மனுதாரர் பெயரில் 4ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு விபத்து சமயத்தில் நடைமுறையில் இருந்ததாலும், எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ தனிதனியாகவோ இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்று வாதிட்டார்.

7. மாறாக, 4–ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது எழுத்து பூர்வமான வாதுரையில், மனுதாரர் விபத்து பதிவேட்டில் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றும், அது குறித்து மருத்துவர் தனது சாட்சியத்தில் சொல்லியுள்ளார் என்றும், மனுதாரர் நிலைதடுமாறி தானாக கீழே விழுந்து விட்டார் என்றும், கார் ஓட்டுனர் தனது சாட்சியத்தில் அவரது

மனைவி கர்ப்பமாக இருந்ததால் அடிக்கடி நீதிமன்றத்திற்கு வர இயலாது என்பதால் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதாக சொல்லியுள்ளார் என்றும், கார் ஓட்டுநர் கவனகுறைவால் விபத்து ஏற்படவில்லை என்பதால் 4ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றும், 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

8. மனுதாரர் தரப்பு கூற்றை நிரூபிப்பதற்கு மனுதாரர் செல்வராஜ் ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, முதல் தகவலறிக்கையின் கணினி நகல், விபத்து பதிவேட்டின் நகல், காயச்சான்றிதழின் நகல், பவானி மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள விடுவிப்பு சான்றின் அசல், TN 42 AY 6463 என்ற வாகனத்தின் பதிவு சான்று மற்றும் காப்பீட்டு சான்றின் நகல், TN 42 AY 6463 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல், விஜய் என்பவரது ஓட்டுனர் உரிமத்தின் நகல், மாதிரி வரைபடத்தின் நகல், குற்றப்பத்திரிக்கையின் நகல், STC 319/2024 தீர்ப்பின் சான்றிட்ட நகல், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையின் நகல்(அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது), மருத்துவ பில்கள், பவானி மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள விடுவிப்பு சான்றின் அசல், மருத்துவ பில்கள்(ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது), மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் ஆகியவை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.16 ஆகவும், நுண்கதிர் படத்துடன் கூடிய ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையை பரிசீலிக்கையில், மனுதாரரை விசாரித்து பெற்ற புகார் வாக்குமூலத்தின் பேரில், TN 42 AY 6463 காரின் ஓட்டுனர் மீது இ.த.ச பிரிவுகள் 279, 337-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. ம.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், (4ம் எதிர்மனுதாரர் தரப்பில்) "*என் வருமானம், தொழில் ஆகியவற்றை நிரூபிப்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து எப்போது நடந்தது என்றால் 1-1/2 வருடம் இருக்கும். என் மீது மோதிய வண்டி என்ன வண்டி என்றால் கார். நான் ரோட்டில் நடந்து சென்று தடுமாறி முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி பின்னால் வந்த காரில் நான் விழுந்து விட்டேன் என்றால் இல்லை. நான் தான் கார் மீது விழுந்து விட்டேன் என்றும், கார் ஓட்டுனர் மீது எந்த தவறும் இல்லை என்றால் நான் மளிகை கடைக்கு மெதுவாக சென்று கொண்டிருக்கும்போது பின்னால் கார் வேகமாக*

*வந்து இடித்து விட்டது. விபத்து பதிவேட்டில் இருசக்கர வாகனம் மோதியதாக சொல்லியுள்ளது என்றால் நான் கார் மோதியதாக தான் சொன்னேன். முதலுதவி சிகிச்சை பெற்ற மருத்துவமனை ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவ பில்கள் மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முன்பு போல் அனைத்து வேலைகளையும் செய்து வருகிறேன் என்றால் இல்லை. வீட்டில் தான் உள்ளேன். எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகி விட்டது என்றும், எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களால் வருமான இழப்போ, ஊனமோ இல்லை என்றால், சரியல்ல. விபத்திற்கு நான் காரணம் என்பதால் 4ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. கார் ஓட்டுனர் ஒப்புகொண்டு அபராதம் செலுத்தி விட்டார். நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில் பிளேட்டை அகற்றியிருந்தால் எனக்கு மருத்துவ செலவு ஏற்பட்டிருக்காது என்றால் ஏற்கனவே பவானி மருத்துவமனையில் பிளேட் வைத்ததால் அங்கே அகற்றி விட்டேன். அதிக இழப்பீடு பெறுவதற்காக மருத்துவ பில்களை மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.*" என்று மனுவை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார்.

10. ம.சா.ஆ.2 விபத்து பதிவேட்டின் நகல், ம.சா.ஆ.3 காயச்சான்று நகல், ம.சா.ஆ.4 விடுவிப்பு சான்று அசல், ம.சா.ஆ.9 மாதிரி வரைப்படம் ஆகியவற்றை பரிசீலிக்கையில், விபத்து நடந்த தேதி, இடம், நேரம் மற்றும் விதம் ஆகியவை மனுவில் சொல்லியுள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.10 குற்றப்பத்திரிக்கை 1ம் எதிர்மனுதாரர் விஜய் மீது இ.த.ச பிரிவுகள் 279, 338–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. ம.சா.ஆ.11 STC.319/2024 வழக்கில் பவானி குற்றவியல் நீதிமன்றம் எண்.1ல் கடந்த 03.09.2024ம் தேதி 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டு ரூ.2,000/–ம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

11. ம.சா.ஆ.7 TN 42 AY 6463 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலிக்கையில், மேற்படி வாகனம் 2ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதும், மேற்படி வாகனத்தை விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் விஜய் என்பவர் ஓட்டி சென்றுள்ளார் என்பதும், அவருக்கு விபத்து சமயத்தில்

செல்லத்தக்க ஓட்டுனர் உரிமம் உள்ளது என்பதும் தெரிய வருகிறது. மேற்படி வாகனத்திற்கு எவ்வித சேதாரமும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

12. இவ்வழக்கில், TN 42 AY 6463 என்ற வாகனத்தின் ஓட்டுனரான 1ம் எதிர்மனுதாரர், பதிவு பெற்ற உரிமையாளரான 2ம் எதிர்மனுதாரர் மற்றும் காப்பீடு செய்தவரான 3ம் எதிர்மனுதாரர் ஆகியோர் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி வாகனத்தின் காப்பீட்டு நிறுவனமான 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லியுள்ள கூற்றை நிரூபிக்க, காரின் ஓட்டுனரான 1ம் எதிர்மனுதாரர் விஜய் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது முதல் விசாரணையில், "*கடந்த 16.01.2024ம் தேதி பகல் 12.45 மணிக்கு பவானி – ஆப்பகூடல் ரோட்டில் காடையாம்பட்டி சிங்காரவேலன் வீட்டிற்கு அருகில் TN 42 AY 6463 என்ற காரை நான் ஓட்டி சென்றேன். அப்போது பெரியவர் ஒருவர் ஓரமாக நின்று கொண்டிருந்தவர் திடீரென ரோட்டை கடப்பதற்காக வந்து எனது வாகனத்திற்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி பின்னர் எனது காரில் விழுந்து விட்டார். விபத்திற்கு எனக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனம் தான் காரணம்.*" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

13. எ.ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில், (மனுதாரர் தரப்பில்), " *விபத்து நடந்தது உண்மை என்றால் சரிதான். பெரியவர் இருசக்கர வாகனம் மோதி கீழே விழுந்து விட்டார் என்று பவானி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என் மீது தவறு இல்லை என்று காவல் உயர் அதிகாரிகளுக்கு புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டேன் என்றால் ஆமாம். என் மீது தான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து பவானி குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் ஆமாம். குற்றவழக்கில் விசாரணை செய்து என் மீது ரூ.2000/–ம் அபராதம் விதிக்கப்பட்டது என்றால் ஆமாம். நான் அபராத தொகை செலுத்தினேனா என்றால் செலுத்தினேன். நான் திருப்பூரில் இருந்து பவானிக்கு வந்து கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் எனது மனைவிக்கு குழந்தை பேறு என்பதால் அபராதம் செலுத்தி விடலாம் என்று செலுத்தி விட்டேன். விபத்திற்கு இருசக்கர வாகனம் காரணம் இல்லை என்றும், நான் தான் காரணம் என்றும், இழப்பீடு கொடுப்பதை தவிர்ப்பதற்காக பொய்யாக சாட்சியம்*

*அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல."* என்று சாட்சியம் அளித்துள்ளார்.

14. எ.ம.சா.ஆ.1 தனது சாட்சியத்தில் ஓரமாக நின்று கொண்டிருந்த பெரியவர் திடீரென ரோட்டை கடப்பதற்காக வந்து காருக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி பின்னர் காரில் விழுந்து விட்டதாக சொல்லியுள்ளார். ஆனால் அது குறித்து 4ம் எதிர்மனுதாரர் எதிருரையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. மேலும், காரின் ஓட்டுனர் குற்றவியல் நீதிமன்றத்தில் அபராத தொகை செலுத்தி விட்டதாக ஒப்புக் கொண்டுள்ளார்.

15. பவானி அரசு மருத்துவமனையின் நுரையீரல் மருத்துவர் டாக்டர். செந்தில்நாதன் எ.ம.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது முதல் விசாரணையில்," *நான் பவானி அரசு மருத்துவமனையில் நுரையீரல் மருத்துவராக பணி செய்கிறேன். செல்வராஜ் த/பெ. நரசிம்மன் என்பவர் சாலை விபத்தில் அடிப்பட்டு 16.01.2024ம் தேதி மதியம் 1.00 மணியளவில் எங்கள் மருத்துவமனைக்கு வந்தார். நான் தான் அவருக்கு விபத்து பதிவேடு எழுதினேன். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் நடந்து சென்று கொண்டிருந்த போது இருசக்கர வாகனம் இடித்து விபத்து ஏற்பட்டதாக சொன்னார். மேற்படி செல்வராஜ் என்பவரது விபத்து பதிவேட்டின் உண்மை நகல் எ.ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. "* என்று சாட்சியம் அளித்துள்ளார்.

16. எ.ம.சா.3 தனது குறுக்கு விசாரணையில், (மனுதாரர் தரப்பில்), *"செல்வராஜ் சிகிச்சைக்கு வந்த போது விபத்து பற்றி அவருடன் வந்தவர் சொன்னாரா என்றால் ஆமாம். பொதுவாக விபத்தில் அடிப்பட்டு சிகிச்சைக்கு வரும் போது காயம்பட்டவர் பதட்டத்துடன் இருப்பார் என்றால் ஆமாம். பதட்டத்தில் விபத்து பற்றி மாற்றி சொல்வதற்கு வாய்ப்புள்ளது என்றால் ஆமாம்."* என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி எ.ம.சா.3 மருத்துவர் தனது சாட்சியத்தில் மனுதாரருடன் வந்தவர் விபத்து பற்றி சொன்னார் என்றும், பதட்டத்தில் இருப்பதால் விபத்து பற்றி மாற்றி சொல்வதற்கு வாய்ப்புள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்து இருசக்கர வாகனம் மோதி ஏற்பட்டதாக சொல்லயுள்ள கூற்று ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்று இவ்வாயம் கருதுகிறது.

17. எனவே, மேலே விவரிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில், மனுதாரர் கூறுகிற வகையில் விபத்து நடந்துள்ளது என்பதும், மேற்படி விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்பதும், மேற்படி சாட்சியம் மற்றும் ஆவணங்களிலிருந்து மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இவ்வாயம் தீர்மானித்து, மேற்படி விபத்திற்கு, 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவே காரணம் என்று இவ்வாயம் முடிவு செய்கிறது.

18. ம.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் TN 42 AY 6463 என்ற வாகனம் 2ம் எதிர்மனுதாரர் பெயரில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும், ம.சா.ஆ.8 ஆவணத்தின் மூலம் மேற்படி வாகனத்தின் ஓட்டுநருக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பதும் தெரியவருகிறது. ம.சா.ஆ.6 காப்பீட்டுச் சான்றை பரிசீலிக்கையில், மேற்படி வாகனம் 3ம் எதிர்மனுதாரர் பெயரில், 4ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி காப்பீடு 12.09.2023 முதல் 11.09.2024 வரை அதாவது விபத்து நடந்த தேதியான 16.01.2024 தேதியன்று ஊர்ஜிதத்தில் உள்ளது என்று தெரிய வருகிற நிலையில், 1-ம் எதிர்மனுதாரரின் செய்கைக்காக, 4-ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு நஷ்டஈட்டு தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் என்று முடிவு செய்து, அவ்வாறே பிரச்சனை 1, 2க்கு இவ்வாயம் விடையளிக்கிறது.

19. ***<u>பிரச்சனை எண்.3 -க்கான தீர்வு</u>:***

விபத்து சமயத்தில் மனுதாரருக்கு வயது 68 என்றும், மனுதாரர் நல்ல திடகாத்திரமாகவும், உடல் ஆரோக்கியத்துடனும் இருந்து, மூட்டை தூக்கும் வேலை செய்து மாதம் ரூ.30,000/-ம் வரை சம்பாதித்து, குடும்பத்தை நடத்தி வந்தார் என்றும், விபத்திற்கு பின்பு மனுதாரர் தனது குடும்பத்தை சரிவர பராமரிக்க முடியாமல் வருமான இழப்பு ஏற்பட்டு, மன ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் கஷ்ட, நஷ்டத்துடன் வாழ்ந்து வருகிறார் என்றும், மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார். அதற்கு மாறாக, 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரரின் வயது, மாத வருமானம், தொழில் ஆகியவை குறித்து ஆதாரத்துடன் நிரூபிக்கப்படவில்லை என்று வாதிட்டார்.

20. விபத்து சமயத்தில் மனுதாரருக்கு வயது 68 என்றும், மனுதாரர் மூட்டை தூக்கும் வேலை செய்து மாதம் ரூ.30,000/-ம் சம்பாதித்து வந்தார் என்பதற்கு சாட்சி, சான்றாவணம் எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. ம.சா.ஆ.2 விபத்து பதிவேட்டில் மனுதாரருக்கு வயது 65 என்றும், ம.சா.ஆ.12 ஆதார் அடையாள அட்டையின் நகலில் மனுதாரரின் பிறந்த வருடம் 1956 என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்நிலையில் விபத்து தேதியில் மனுதாரர் 68 வயதுடைய நபர் என்று இவ்வாயம் முடிவு செய்கிறது. மனுதாரரின் வயது, விபத்து நடந்த தேதி ஆகியவற்றை கருத்தில் கொண்டு, அவர் சாதாரண வேலை செய்வதாக எடுத்துக் கொண்டாலும், அவர் மாதம் ரூ.6,000/- வரை வருவாய் ஈட்டக்கூடிய நபர் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

21. மேற்படி விபத்தின் காரணமாக மனுதாரர் பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு அங்கு 19.01.2024 முதல் 05.02.2024 வரை சுமார் 18 நாட்கள் RTA Left leg injury - Leg lower 1/3rd comminuted fracture tibia, RTA left Hand injury - Fracture shaft of left humerus, 1) Wasting of all left upper arm, left forearm and left hand muscles, 2)Medial and ulnar nerve motor functions could not be evaluated, 3) Left II and III finger already amputated at distal interphalangeal joint and proximal interphalangeal joint respiratory levels, 4) Fingers and hand movements but for slight pinching totally absent, 5) Upper arm in badly wasted, gross deformity + காயத்திற்கு Interlocking nailing tibia for left tibia was done on 20.01.2024, ORIF with IM nailing under GA with bone graft was done on 31.01.2024 சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.4 விடுவிப்பு சான்று மூலமாக தெரியவருகிறது.

22. பின்னர் மனுதாரர் மீண்டும் அதே மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு அங்கு 29.08.2025 முதல் 04.09.2025 வரை சுமார் 7 நாட்கள் Infected tibia nail for compound both bone fracture - left leg காயத்திற்கு Implant exit was done on 30.08.2025 சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.14 விடுவிப்பு சான்று மூலமாக தெரியவருகிறது.

23. மனுதாரருக்கு 1) Swelling, tenderness, deformity on right leg, 2) Abrasion on left 3) Swelling, tenderness, deformity 4) Interlocking nailing tibia for left tibia காயங்கள் உள்ளது என்றும், மேற்படி காயங்களில் 1,3 வது காயங்கள் கொடுங்காயங்கள் என்றும், 2 ம்

காயம் சாதாரண காயம் என்றும் ம.சா.ஆ.3 காயச்சான்றிதழில் சொல்லப்பட்டுள்ளது. இந்நிலையில் குறைந்தது 5 மாத காலம் மனுதாரரால் எந்த வேலைக்கும் செல்ல இயலாது. எனவே மேற்படி சிகிச்சையில் இருந்த காலத்திற்கு வருமான இழப்பாக 5 x 6,000 =30,000/− மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

24. மனுதாரரின் ஊனம் குறித்து பரிசோதனை செய்வதற்காக இந்நீதிமன்றத்தால் அரசு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டு ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்தில், மனுதாரருக்கு Left comminuted tibia, left shaft of humerus on pre existing flail, left upperlimb with claw hand, ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் அவருக்கு Difficulty in squatting, sitting crossleged climbing stairs, walking down slopes, pain at kneeling, abulation, drinking water, fracture site ஏற்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்கு மருத்துவமனையில் 30% நிரந்தர இயலாமை இருப்பதாக ஊனச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

25. ***CMA.No.3003 and 3096/2024 (Sudhakar Vs.Geetha)*** என்ற வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் கீழ்கண்டவாறு தீர்வு காணப்பட்டுள்ளது.

***“Tribunal has adopted the per percentage method and fixed a sum of Rs.5,000/- per percentage. Considering the fact that the accident had taken place in the year 2020, this court is inclined to fix a sum of Rs.8,000/- per percentage”***

26. மேற்படி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த முன்மாதிரி தீர்ப்பில் பொருளாதார வீழ்ச்சியை கருத்தில் கொண்டு 2020 ம் வருடத்தில் நடந்த விபத்திற்கு 1% ஊனத்திற்கு ரூ.8,000/− வழங்கலாம் என்று தீர்வு கண்டுள்ளதன் அடிப்படையில், மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தை கருதி, 1% ஊனத்திற்கு ரூ.8,000/− என கணக்கிட்டு 30% ஊனத்திற்கு 30x8000=ரூ.2,40,000/− மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

27. பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையின் மேலாளர் தீபக் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது முதல் விசாரணையில், *"நான் பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் மேலாளராக பணி செய்கிறேன். மனுதாரர் செல்வராஜ் த/பெ. நரசிம்மன் எங்கள் மருத்துவமனையில் 19.01.2024 முதல் 05.02.2024 வரை*

*முதலில் சிகிச்சை பெற்றார். அதற்கான மருத்துவ செலவு ரூ.5,84,428/–. இரண்டாவது முறை 29.08.2025 முதல் 04.09.2025 வரை சிகிச்சை பெற்றார். அதற்கான மருத்துவ செலவு ரூ.83,408/–.மொத்தமாக மருத்துவ செலவு ரூ.6,67,886/–.அது தொடர்பான மருத்துவ பில்களின் உண்மை நகல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யபடுகிறது."* என்று சாட்சியம் அளித்துள்ளார்.

28. மனுதாரர் தரப்பில் மருத்துவ செலவுகளுக்காக ம.சா.ஆ.13 மற்றும் ம.சா.ஆ.15 மருத்துவ பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மருத்துவ பில்கள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில், மேற்படி ம.சா.ஆ.13 மற்றும் ம.சா.ஆ.15 மருத்துவ பில்கள் அடிப்படையில், ரூ.6,67,886/– தொகை மருத்துவ செலவிற்காக மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

29. ம.சா.ஆ.2 விபத்து பதிவேட்டு நகல், ம.சா.ஆ.3 காயச்சான்றிதழ் நகல், ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.14 விடுவிப்பு சான்றுகள் மற்றும் நீ.ம.சா.ஆ.1 நுண்கதிர் படத்துடன் கூடிய ஊனச்சான்றிதழ் ஆகியவற்றை பரிசீலித்த வகையில், மேற்படி விபத்தின் போது மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனை, வசதி இழப்பு ஆகியவற்றிற்கும், மனுதாரருக்கு சிகிச்சை காலத்திலும் அதன்பிறகும் உதவியாளர் உடனிருந்து கவனித்துக்கொண்ட வகையில் ஏற்பட்ட செலவினங்கள், மனுதாரருக்கு ஏற்பட்ட ஊட்டச்சத்து மற்றும் போக்குவரத்து செலவினங்கள், உடை சேதம் ஆகியவற்றிற்கு, இத்தீர்ப்பாயத்தால் நீதியின்பால் உகந்ததாக நிர்ணயம் செய்யப்படும் நஷ்ட ஈட்டுத் தொகை கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்படுகிறது.

| **வ. எண்** | **இழப்பீடு வழங்கப்படும் இனங்கள்** | **பகிர்ந்தளிப்பு செய்யப்படும் தொகை** |
|---|---|---|
| 1. | மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைகளுக்காக | ₹.80,000/– |
| 2. | மனுதாரருக்கு ஏற்பட்ட வருமான இழப்பிற்காக | ₹.30,000/– |
| 3. | மனுதாரருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவினங்களுக்காக | ₹.6,67,886/– |
| 4. | மனுதாரருக்கு ஏற்பட்ட போக்குவரத்து செலவினங்களுக்காக | ₹.20,000/– |
| 5. | மனுதாரரின் ஊட்டச்சத்து செலவினங்களுக்காக | ₹.20,000/– |

| | | |
|---|---|---|
| 6. | மனுதாரர் உதவியாளர் வைத்துக்கொண்டதற்கு ஏற்பட்ட செலவினங்களுக்காக | ₹.20,000/– |
| 7. | மனுதாரரின் உடைகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக | ₹.1,000/– |
| 8. | வாழ்வதற்கு வசதி குறைவு (அசௌகரியத்திற்கான இழப்பீடு) | ₹.20,000/– |
| 9. | நிரந்தர ஊனத்திற்கான இழப்பீடு | ₹.2,40,000/– |
| | மொத்தம் | ₹.10,98,886/– |

30. மேற்படி மொத்த இழப்பீடு தொகை ரூ.10,98,886/–ஐ மனுதாரருக்கு 4ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்று இப்பிரச்சினைக்கு இத்தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

முடிவில், கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது.

1. இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2. மாண்புமிகு உச்சநீதிமன்றம் சிவில் அப்பீல் எண்.4299/2025 (பர்மிந்தர் சிங் – எதிர்– ஹனிகோயல் மற்றும் பலர்) மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ROC.No.55584/2025, நாள்: 02.07.2025ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி, மொத்த இழப்பீடு தொகையான ரூ.10,98,886/–ஐ இந்த மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தும் தேதி வரை 7.5% வட்டியுடன் (தவறுகை காலம் ஏதேனும் இருப்பின் நீங்கலாக) 30 நாட்களுக்குள், மனுதாரர் மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியதை உறுதி செய்த பிறகே, 4ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு (ம.சா.ஆ.16) நேரடியாக செலுத்தி வைக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

| மனுதாரர் பெயர் | வங்கி கணக்கு எண். | வங்கியின் விவரம் |
|---|---|---|
| செல்வராஜ்,<br>த/பெ. நரசிம்மன், | 9561001700027194 | பஞ்சாப் நேஷனல் வங்கி.<br>எடப்பாடி கிளை. |

3. மேற்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் படி, மேற்படி தொகை செலுத்தியது குறித்து உரிய ஆவணத்துடன் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவேண்டும்.

4. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 11.5.2020–ம் தேதி Tr. CMP. Nos. 264 to 281 of 2020 M/s Cholamandalam MS Genl. Ins. Co. Ltd., Vs. Mr. Ayyannar.S. and others

என்ற வழக்கில் வழங்கிய உத்தரவுக்கிணங்க தனியாக தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை.

5. மனுதாரர் செலுத்திய நீதிமன்றக்கட்டணம் ₹.20/-. மனுதாரர் இழப்பீடு தொகைக்கான மீதமுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.10,341.36/- ஐ 10 தினங்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு செலுத்தியதற்கான ரசீதுகள் இரண்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, பரிசீலித்து, உரிய முத்திரை மற்றும் கையெழுத்து பெற்ற பிறகு, அதனை 4ம் எதிர்மனுதாரரிடம் கொடுக்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

6. வழக்கறிஞர் கட்டணம் ரூ.17,989.00/- மற்றும் மொத்த செலவுத்தொகை ரூ.28,668.86/- என நிர்ணயிக்கப்படுகிறது.

**<u>செலவுப் பட்டியல்</u>**

| | மனுதாரர்<br>ரூ. பை |
|---|---|
| மனுவிற்கான நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | 10,361.36 |
| வக்காலத்து நாமா ஸ்டாம்பு | 10.00 |
| தஸ்தாவேஜுகளுக்கு ஸ்டாம்பு | 60.00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 17,989.00 |
| புராசஸ் கட்டணம் | 88.50 |
| விண்ணப்ப செலவு | 60.00 |
| எழுத்துக் கூலி | 100.00 |
| மொத்தம் | 28,668.86 |

இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்ட பின்னர், என்னால் சரி பார்க்கப்பட்டு 14.08.2026 ம் நாள் இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANYADEVI K
Digitally signed by KANYADEVI K
Date: 2026.08.14 17:41:29 +0530

மோட்டார் வாகன விபத்து கோரிக்கை
தீர்ப்பாய நீதிபதி மற்றும் சிறப்பு
சார்பு நீதிபதி எண்.1 சேலம்.

***மனுதாரர் தரப்பு சாட்சி***:

ம.சா.1 – திரு.செல்வராஜ் (மனுதாரர்)

***மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்***:

| வ.எண். | ஆவணங்களின் பெயர் |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவலறிக்கையின் கணினி நகல் |
| ம.சா.ஆ.2 | விபத்து பதிவேட்டின் நகல் |
| ம.சா.ஆ.3 | காயச்சான்றிதழின் நக |
| ம.சா.ஆ.4 | பவானி மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள விடுவிப்பு சான்றின் அசல் |
| ம.சா.ஆ.5 | TN 42 AY 6463 என்ற வாகனத்தின் பதிவு சான்றின் நகல் |
| ம.சா.ஆ.6 | TN 42 AY 6463 என்ற வாகனத்தின் காப்பீட்டு சான்றின் நகல் |
| ம.சா.ஆ.7 | TN 42 AY 6463 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் |
| ம.சா.ஆ.8 | விஜய் என்பவரது ஓட்டுனர் உரிமத்தின் நகல் |
| ம.சா.ஆ.9 | மாதிரி வரைபடத்தின் நகல் |
| ம.சா.ஆ.10 | குற்றப்பத்திரிக்கையின் நகல் |
| ம.சா.ஆ.11 | STC 319/2024 தீர்ப்பின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.12 | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையின் நகல், (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ.13 | மருத்துவ பில்கள் |
| ம.சா.ஆ.14 | பவானி மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள விடுவிப்பு சான்றின் அசல், |
| ம.சா.ஆ.15 | மருத்துவ பில்கள்(ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது), |
| ம.சா.ஆ.16 | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் |

***4 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :*** .

எ.ம.சா.1 – விஜய் (1 ம் எதிர்மனுதாரர்)

எ.ம.சா.2 – தீபக் (பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையின் மேலாளர்)

எ.ம.சா.3 – டாக்டர்.செந்தில் நாதன் ( பவானி அரசு மருத்துவமனையின் நுரையீரல் மருத்துவர்)

***4 ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்*** :

எ.ம.சா.ஆ.1 –செல்வராஜ் என்பவரது விபத்து பதிவேட்டின் உண்மை நகல்

***சாட்சி தரப்பு சான்றாவணம்:***

சா.சா.ஆ.1 – மருத்துவ பில்களின் உண்மை நகல்

***நீதிமன்ற சான்றாவணம்***:

நீ.ம.சா.ஆ.1 – நுண்கதிர்படத்துடன் கூடிய ஊனச்சான்று.

KANYADEVI K

Digitally signed by KANYADEVI K
Date: 2026.08.14 17:41:14 +0530

மோட்டார் வாகன விபத்து கோரிக்கை
தீர்ப்பாய நீதிபதி மற்றும் சிறப்பு
சார்பு நீதிபதி எண்.1 சேலம்.